ஜூன் 9, 2023

# சிற்றுண்டியகங்கள், பார்கள் (மது அருந்தும் இடங்கள்) மற்றும் காபி குடிக்கும் கடைகள், பேஷியோ பிராம்ப்டன் (தற்காலிக நிழற்குடை) (Patio Brampton program) திட்டத்திற்காக விண்ணப்பிப்பதை நகர நிர்வாகம் வரவேற்கிறது

***இந்தக் கோடைப்பருவத்தில் உள்ளூர் வணிகங்களை ஆதரிக்கும் விதமாக குடியிருப்பு வாசிகள் அமர்ந்து சாப்பிடும் வகையில் திறந்தவெளி நீட்டிப்பு முற்றங்களில் கடைகளுக்கான இடம் அமைத்துக் கொடுத்தல்***

பிராம்ப்டன், ON –கோடைப் பருவத்துக்கு முன்னதாகவே, தற்காலிக பருவகால நிழற்குடை நீட்டிப்பு மற்றும் அமரும் பகுதிகளை  நகராட்சி அல்லது தனியார் கட்டிடங்களில் அமைத்துக்கொள்ள உணவகங்கள், பார்கள் மற்றும் கஃபேக்கள் அக்டோபர் 31, 2023 வரை விண்ணப்பிக்கலாம் என்று பிராம்ப்டன் நகர நிர்வாகம் நினைவூட்டுகிறது. இந்த வகை நிழற்குடை நீட்டிப்பு அகற்றப்படுவதற்கு விண்ணப்பதாரரே பொறுப்பு. நவம்பர் 7 ஆம் தேதி காலை 7 மணிக்கு முன்னதாகவே இந்த இடங்களை அவற்றின் அதன் அசல் வடிவத்திற்குத் திருப்பி அமைப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

இப்படியான தற்காலிக நிழற்குடை விரிவாக்கம் செய்துகொள்வதற்கான விண்ணப்பம் நகரின் வலைத்தளத்தில் கிடைக்கிறது மற்றும் நகர் மன்ற அலுவலகத்திற்கு ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தற்காலிக நிழற்குடை  அமைக்கும் திட்டம் மூலமாக, இன்னும் அதிக குடியிருப்புவாசிகள் திறந்தவெளியில் அமர்ந்து தங்கள் உணவை கோடை சீதோஷ்ண நிலையுடன் சேர்த்து சுவைத்து மகிழ்வதுடன் உள்ளூர் வணிகர்களுக்கு ஆதரவு தரவும் இயலும்.

## 2023 ஆம் ஆண்டில் புதிது

*ஜனவரி 1, 2023 தேதிப்படி, மதுபான உரிமம் மற்றும் கட்டுப்பாடு சட்டம், 2019 , ஒன்ட்டாரியோ ஒழுங்குமுறை 746/21 இன் பிரிவு 153.1 இன் படி, மதுபான உரிமம் பெற்ற வளாகத்தின் தற்காலிக வெளிப்புற நிழற்குடை நீட்டிப்புகளை அங்கீகரிக்கும் ஆளுமை அதிகாரத்தை, ஒன்ட்டாரியோ*

*அரசாங்கம் நகராட்சிகளுக்கு நிரந்தரமாக வழங்கியது. முன்னதாக, மதுபான உரிமங்களின் அனைத்து தற்காலிக வெளிப்புற நீட்டிப்புகளுக்கான ஒப்புதல் AGCO இன் ஆளுமை அதிகாரத்தின் கீழ் இருந்தன, மேலும் விண்ணப்பதாரர் நகராட்சியிடமிருந்து ஆட்சேபனை இல்லாமைக்கான கடிதத்தை வழங்க வேண்டி இருந்தது. செல்லத்தக்க மதுபான உரிமம் கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு உரிமம் பெற்ற பகுதிகளின் வெளிப்புற நிழற்குடை நீட்டிப்புகளுக்கு மட்டுமே இது பொருந்தும். ஏற்கனவே உரிமம் பெற்ற நிறுவனத்திற்கு மதுவை பரிமாறவும் அருந்துவதற்கும் கால நீட்டிப்பு AGCO விடம் ஒப்புதலுக்காக உள்ளது.*

ஜனவரி 1, 2023 தேதிப்படி:

- ஒரு காலண்டர் ஆண்டில் உரிமம் பெற்ற வளாகத்தின் தற்காலிக வெளிப்புற நீட்டிப்புகளை எட்டு மாதங்கள் வரை அங்கீகரிக்க அந்தந்த நகராட்சிகள் அதிகாரம் கொண்டுள்ளன
- நகராட்சிகளின் ஒப்புதலின்பேரில் தங்கள் சொந்த நிபந்தனைகளை உருவாக்க அந்தந்த நகராட்சிகள் அனுமதிக்கப்படுகின்றன
- நகராட்சியினால் ஒப்புதல் அளிக்கப்படும் திறந்தவெளி நிழற்குடை நீட்டிப்புக்கான எந்த நிபந்தனைகளுக்கும் இணங்குவதை உறுதி செய்து கொள்ள அந்தந்த நகராட்சிகள் பொறுப்பாகின்றன

**பின்புலம்**

ஜூன் 2020 இல், நகர் மன்றமானது, பிராம்ப்டன் பார்கள் மற்றும் உணவகங்கள் தங்கள் திறந்தவெளி முற்றங்களை விரிவுபடுத்துவதை எளிதாக்குவதற்கும், COVID-19 பரவுவதைக் கட்டுப்படுத்த உடல் ரீதியான தூரத்தை அனுமதிப்பதற்கும் ஒரு தற்காலிக நிழற்குடை முற்றம் நீட்டிப்புத் திட்டமாக இந்த  பேஷியோ பிராம்ப்டன் திட்டத்தை கொண்டு வந்தது. இந்த திட்டம் ஜனவரி 1, 2023 அன்றுடன் முடிவடைந்தது.

நிழற்குடை முற்றம் நீட்டிப்பு பற்றிய, அல்லது விண்ணப்பிக்கும் செய்முறை பற்றிய கேள்விகளை cityclerksoffice@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யவும் அல்லது 905.874.2113 ஐ அழைக்கவும்.

**லின்குகள்:**

- பேஷியோ பிராம்ப்டன் திட்டம் (Patio Brampton Program)

- தற்காலிக நிழற்குடை நீட்டிப்புக்கான ஆன்லைன் விண்ணப்ப படிவம் (Temporary Patio Extension Online Application Form)

-30-

**ஊடக தொடர்பு**
பிராம்ப்டன் பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca